மலர் 2 இதழ் 1 ஜூலை, 2017 ISSN : 2454-3993

# காலச்சுவடு சிறுகதைகளில் குடும்ப அமைப்பும் பெண்ணியமும்

முனைவர் சீ. புஷ்பலதா,
முதல்வர்
சக்திகைலாஷ் மகளிர் கல்லூரி
தர்மபுரி

குடும்பம் ஒரு சமூக அமைப்பாகும். இதன் ஆதாரம் ஆண் எனில் ஆணிவேர் பெண். மரபு வழி வந்த 'குடும்பம்' என்ற அமைப்பு நீண்ட வரலாறு உடையது. மார்க்சும், எங்கெல்சும் இவ்வமைப்பு ஒழிக்கப்பட வேண்டும் என்ற புரட்சிகரமான கருத்தைக் கூறியிருந்தாலும், சமதர்ம பெண்ணியவாதிகள், குடும்ப அமைப்பில் தீவிரமான சில மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்றனர். பாரம்பரிய குடும்ப அமைப்பில் பெண்களைப் பொருத்தவரையில் வீட்டிலும் வேலை செய்து, வெளியிலும் வேலை செய்து அதிக சுமைக்கு ஆளாகி தனிமைப் படுத்தப்படுகிறார்கள். இதை லெனின், 'பெண்கள் சமையற்கட்டுக்கும், பள்ளிக்கூடத்திற்கும், வீட்டு வேலைக்கும், வெளி வேலைக்கும் என்று அல்லல்பட்டு ஒரு தொடர் சங்கிலிபோல் செயல்படுகிறார்கள்' என்று கூறுவதாகப் பிரேமா குறிப்பிடுகிறார். மேலும் மத்தியதரக் குடும்பத்தில் ஒரு பெண் கணவனின் விருப்பத்திற்கு அடிபணிந்து, அவனின் விருப்பு, வெறுப்புகளுக்கு ஆளாகி, குழந்தை வளர்ப்பிலும் ஈடுபட்டு, வீட்டையும் பராமரித்து, இயந்திரம் போலச் செயல்படுவதால் மனிதளவிலும், உடலளவிலும் பாதிக்கப்படுகிறாள். குடும்ப அமைப்பில் மாறுபாட்டை ஏற்படுத்தி, பெண்ணுக்கு விடுதலைப் பெற்றுத் தர வேண்டும் என்று சமதர்மப் பெண்ணியவாதிகள் கருதினர்.

குடும்பத்தில் காலம்காலமாகச் சார்பு நிலையில் இருந்து வந்த பெண்களின் அடிமை நிலையை மாற்ற மார்க்சியப் பெண்ணியவாதிகளும் ஆராய்ச்சி செய்தனர். குடும்பத்தில் ஆண், பெண் இருவருக்கும் சமமான உரிமைகள் இருத்தல் அவசியம். குடும்பம், பொருள் உறவு நோக்கில் கட்டமைக்கப்படுவதால் குடும்பமே பெண்கள் மீது சகல ஒடுக்குமுறைகளுக்கும் அடிப்படையாகிறது. ஒடுக்குதலிலிருந்து பெண்கள் விடுதலை பெற வேண்டும் என்பதே ஏங்கெல்ஸ், போன்றோரின் நோக்கமாக இருந்தது.

குடும்ப உறவுகளில் தாய், மனைவி, மருமகள் என்ற மூன்று நிலைகளில் பெண்களுக்குப் பணிப்பகிர்வு அமைகிறது. சமுதாயத்தில் பெண்களின் பணிப்பகிர்வு பற்றிய கொள்கைக்கும் அவர்களின் உண்மையான நிலைக்கும் இடையேயுள்ள முரண்பாடுகளின் விளைவை நவீனப் பெண்ணியத்தில் விளக்கிக் கூறியுள்ளார் ஜூலியட் மிட்செட். பெண் ஏற்கும் உறவுநிலைகளால் தான் சமூகத்தில் அவர்களுக்கு உரிய பணிப்பகிர்வுகள் தீர்மானிக்கப்படுகின்றன என்பது தெளிவாகிறது.

**1. தாயின் உறவுநிலையும், பெண்ணின் பணிப்பகிர்வும்**

நல்ல குடிமகனை, மகளை வளர்க்கும் பணியில் ஆண் தன் பொறுப்பிலிருந்து வழுவினாலும், பெண் அப்பொறுப்பை ஏற்றுச் சரியாகச் செய்கின்றாள். ஒரு குடும்பத்தில் தாயின் பணிப்பகிர்வு / பற்றி பார்க்கும்போது, தாய் குழந்தையை வளர்ப்பதில் ஆர்வம் கொள்கிறார். பிறந்த குழந்தையின் ஆளுமை உருவாக்கச் செயல்பாட்டின் வழி, தன் பங்களிப்பைச் செலுத்தித் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறாள். பழைய பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாக்கிறாள். புதிய தலைமுறையை உருவாக்குகிறாள்[2] என்பதிலிருந்து குழந்தை வளர்ப்பில் தாயின் பங்கேற்பு புலப்படுகிறது. லூயிபிராண்டல்லோவின் 'சின்ஸி' என்ற மொழிபெயர்ப்புக் கதையில் சின்ஸி என்ற சிறுவன் பிறப்பதற்கு முன்பே அவனது தந்தை மரணம் அடைந்ததால் அவன் தன் தந்தையைப் பார்த்ததில்லை. தந்தையை பார்க்கவில்லையே என்ற எண்ணம் அவனிடம் சிறிதும் இல்லை. அவன் அறிந்ததெல்லாம் தாய் மட்டுமேயாவாள். கணவன் இறந்த பிறகு அம்மனைவி ஒரு தாயாக தன் மகனை எவ்வாறு காப்பாற்றுகிறார் என்பதை அச்சிறுவன் மூலம் கொண்டு செல்வதே கதை.

அ. முத்துலிங்கத்தின் 'எதிரி' என்ற மொழிபெயர்ப்புக்கதையில் எமிலி தன் கணவன் நடத்தும் கோழிப் பண்ணையில் உள்ள கோழிகளை உண்ணவரும் பாம்பைக் கொன்றுவிடும்படி அவனிடம் கூறுகிறாள். ஆனால் கணவனோ நிதானத்தைக் கடைப்பிடிக்கிறான். தன் இரண்டு வயது மகனை வீட்டில் விட்டுச் சென்றால், அவன் உயிருக்கு ஊறுவிளைந்துவிடும் என கருதி, பணிக்குச் செல்லும் போதும் மகனையும் தூக்கிக்கொண்டு செல்கிறாள். குழந்தையின் உயிரை பாதுகாப்பதற்காக ஒரு தாய் தன்னுடைய பணித்தளங்களுக்கும் குழந்தையை எடுத்துச்சென்று காக்கும் பொறுப்புடையவளாகிறாள்.

மனோஜ்குமாரின் 'பால்' என்ற கதையில் குழந்தையின் தாய், தந்தை, இருவரும் வீட்டிலிருந்துகொண்டே பால் வியாபாரம் செய்கின்றனர். தந்தையின் கவனக் குறைவால், குழந்தை பால் காய்ச்சும் பெரிய கடாயில் விழுந்து இறந்துவிடுகிறது. குழந்தையைக் காப்பாற்ற எண்ணிய தாய் பதறி சென்று தாவி குழந்தையை எடுக்கிறாள். தீயில் முகமும், முடியும் கருகிவிடுகின்றன. எந்த சப்த வகைக்குள்ளும் அடங்காத நவநீதனின் பெருங்கேவலொலி கேட்டது. நிலை தாண்டி அலறியபடி ராதா துடித்து ஓடி கடாயில் வீழ்ந்து அள்ளுவது தெரிந்தது. கடாய் கவிழ்ந்து, அவள் கூந்தலும் முகமும் செந்தணலினுள் கிடந்தது[3] இக்கதையை எண்ணும்போது, தந்தையின் கவனக்குறைவும், தாயின் பரிதவிப்பும் கண்கூடாகத் தெரிகிறது.

சுமதிரூபனின் 'வடு' என்ற கதையில் மல்லிகா தனது மகள் அஞ்சலியை வளர்க்கும்போது, மிகுந்த கவனத்துடன் இருக்கிறாள். ஒவ்வொரு தாயும் தன் மகளை வளர்த்துத் திருமணம் செய்து தரும் வரை ஒருவித பய்துடனேயே உள்ளனர். இங்கு அஞ்சலிக்குப் பத்து வயதே நிரம்பியிருந்தாலும், அவளது தாய் தன் சிறு வயதில் தனக்கு ஏற்பட்ட இன்னல்கள் அவளுக்கு ஏற்படாதிருக்கும்படி கவனித்து வளர்க்கிறாள்.

'மௌனப்பனி ரகசியப்பணி', 'வெளிச்சமே வெள்ளம் போல' என்ற இரு கதைகளிலும் தாய் தன் குழந்தைகளின் வளர்ச்சியில் பெருமிதம் கொள்வதைக்

காணமுடிகிறது. குழந்தைகளின் தேவை அறிந்து அவர்களுக்கு எந்த மனக்குறையும் இன்றி அவர்களை வழி நடத்தும் தாயைக் காணமுடிகிறது.

தாயானவள் குழந்தையை வளர்க்கும்போது மட்டும் அன்புடையவளாக இருப்பது இல்லை. அக்குழந்தை தன் கருவிலிருக்கும்போதே அதன்மீது அன்பு செலுத்துகிறாள் என்பதை கோகுலகண்ணனின் ’பசி’ என்ற கதை உணர்த்துகிறது. இக்கதையில் லாரா என்ற பெண் கருவுற்றிருக்கும்போது, குழந்தை கருவிலேயே இறந்துவிடுகிறது. தன் கருப்பையின் அளவு சிறியதாக இருந்ததால் தான் குழந்தை இறக்க நேரிடுகிறது என்பதை அறிந்தவுடன் தன் மீதே கோபம் கொள்கிறாள். யாருடனும் எதுவும் பேசாது தனிமையில் வாடுவதுடன் நினைத்த நேரத்தில் உணவு உண்டு உடல் பெருத்துவிடுகிறாள். இதனால் மனம் வெறுத்து வெளியில் செல்வதையும் தவிர்க்கிறாள். இறுதியில் ஒருநாள் மனம் பேதலித்து மிருகக்காட்சி சாலையில் உள்ள முதலைக்கு தன்னை உணவாக்கி கொள்கிறாள். லாராவின் தற்கொலைக்குக் காரணம் தன் குழந்தையைத் தன்னால் சரியாக பெற்று எடுக்க முடியவில்லை என்பதேயாகும். மேற்கூறப்பட்ட அனைத்துக் கதைகளிலும் தாயே பொறுப்பாகக் குழந்தையை வளர்ப்பதை காணமுடிகிறது.

பெண்ணின் உழைப்பு ஆணின் தேவையை நிறைவு செய்வதற்காக புனைந்துரைக்கப்படுகிறதே தவிர, அவளின் தேவைக்காக அவளுடைய உடல் உழைப்பு புனைந்துரைக்கப்படவில்லை. அத்துடன் குடும்பப்பணிகளில் பெண், தாயாக முழுநேரமும் சலிப்புறாது உழைத்தாலும், குடும்பத்தின் தேவையை நிறைவு செய்வதாலும் அதற்காக அவளுக்கு எவ்வித ஊதியமும் வழங்கப்படுவதில்லை [4]எனப் பெண்ணியம் கூறுகிறது. எனவே, குடும்பத்தில் பெண்ணின் பங்கு குறித்து யோசிக்கும்போது மனைவியின் நிலையை ஆராய்வது மிகுந்த பயனளிக்கும்.

### 2.11.2 மனைவி உறவுநிலையும், பெண்ணின் பணிப்பகிர்வும்

திருமண அமைப்பு, பெண்ணை ’மனைவி’ என அறிமுகப்படுத்துகிறது. மனைவி என்ற உறவுநிலையில் கூடுதல் பணியினை ஏற்கும் வாய்ப்பினை ஏற்படுத்துகிறது. மனைவியின் இயக்கம் குடும்பத்தைச் சுற்றி இருப்பதால் அவளது உழைப்பு, இருப்பு யாவும் ஆணிற்கு இன்பம் தேடித்தரும் புராதனச் செயலாக இருக்கின்றது. மனைவியின் மகிழ்ச்சி, செயல்கள் யாவும் கணவனைச் சார்ந்ததாகக் கற்பிக்கப்பட்டுள்ளன. சில நேரங்களில் கணவனும், பல நேரங்களில் கணவனைச் சார்ந்தோரும் காரணிகளாகின்றனர். இது நேரிடையே மனைவி பணிப்பகிர்வு மூலம் குடும்ப அமைப்பில் செயலாகிறது. பொறுப்புகளை அதிகம் சுமத்தி, ஆதாயமடையும் கணவனின் அதிகாரம் மனைவியின் பணிப்பகிர்வால் சாத்தியமாகியது என்கின்றனர் அறிஞர்கள். ஆனால் நடைமுறையில், வேலை செய்கின்ற உலகினின்றும் தப்பித்துக்கொள்ள, குடும்பத்தை ஒரு தளமாகக் கொண்டும் வசதி, சுகம், பாதுகாப்பு, அன்பான அரவணைப்பு ஆகியவற்றை மனைவி, பெண்கள் சகோதரிகளிடமிருந்து, ஆண்கள் எதிர்பார்க்கின்றனர். வேலை செய்யும் உலகுக்கு முற்றும் மாறானதாக இது சித்திரிக்கப்படுகிறது. ஆகவே, பெண்களுக்கு ஏற்கனவே அறிந்தது போல குடும்பப் பொறுப்பு மிகப்பெரிய வேலை செய்யும் களமாக அமைகிறது[5].

தீலிப்குமாரின், 'நிகழமறுத்த அற்புதம்' என்ற கதையில் இருபத்தைந்து வருட திருமண வாழ்விற்கு பிறகு, ஜேம்ஸ் தம்பதியினர் பிரிந்து வாழும் சூழ்நிலை உருவாகிறது. கணவன் என்பவன் மனைவியிடம் பாசமும் பற்றும் வைத்திருத்தல் வேண்டும். ஆனால் ஜேம்ஸ் ஆண் ஆதிக்கத்தின் வடிவமாகக் காட்சி தருகிறான். தன்னுடைய மலட்டுத்தன்மையை மறைத்துக் கொள்வதற்காக குடிக்கிறான். பல நாட்கள் குடித்துவிட்டு மனைவியை அடித்துத் துன்புறுத்துகிறான். எவ்வித வேலைக்கும் செல்லாமல் மனைவியின் ஊதியத்திலேயே குடித்துக் காலத்தைக் கழிக்கிறான். குடும்பத்தின் அனைத்துத் தேவைகளையும் வேலைகளையும் மனைவியே கவனித்துக் கொள்கிறாள். தனக்காக உழைக்கும் மனைவி தன்னை விட்டு விலகிவிடக்கூடாது என்பதற்காக தன் மீதுள்ள பல குறைகளைத் தானே கூறுகிறான். இக்கதையில் ஜேம்ஸ் என்ற ஆணாதிக்க மரபைக் கட்டிக் காப்பவனாகவும், அவன் மனைவி வீட்டிலும், வெளியிலும் உழைத்துக் களைத்து போவதையும் காணமுடிகிறது.

கலாமோகனின் 'கனி' என்ற கதையில் ஒரு பெண்ணைக் காதலிக்கும் முன்போ, அவளுடன் உறவு கொள்ளும் முன்போ ஒரு ஆண் தன்னுடைய குடும்பத்தின் கௌரவத்தைப் பற்றியோ, தன்னுடைய மனைவிக்கு செய்யும் துரோகம் குறித்தோ சற்றும் சிந்திப்பது இல்லை. தன்னுடைய குரூர ஆசை நிறைவேறிய பின்னர்தான் செய்த செயலை யோசிக்கிறான். இத்தகைய போலிக் கௌரவ வேடமிடும் ஆண்களால், சமுதாயத்தில் தாழ்ந்த நிலையிலும், பொருளாதாரத்தில் கீழ்நிலையிலும் உள்ள பெண்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இக்கதையில் கணவனால் தாய்மைப்பேறு அடைய முடியாத பெண்ணிடம் ஆசை வார்த்தைக்கூறி பழகி, அவளை ஏமாற்றி, கருவுறச் செய்கிறான் ஒருவன். அவள் தான் கருவுற்றதை அறிந்து ஏற்றுக்கொள்ளக் கூறுகிறாள். ஆனால் அவன் தனது சுற்றத்தார் அவளை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று கூறுகிறான். தனக்குத் திருமணமாகி மனைவி இருப்பதையும் கூறுகிறான். முதலில் தன் மனைவிக்கு தான் துரோகம் இழைப்பதாக எண்ணாதவன், தன் தேவை முடிந்ததும் தனக்கு மனைவி இருப்பதை நினைவு கொள்கிறான். இத்தகைய வஞ்சகர்களை நம்பியே இன்றைய பெண்கள் இருக்க வேண்டியுள்ளது. தன் கணவனுக்கு செய்யும் துரோகத்தைக் குறித்து சற்றும் யோசிக்காமல் அவள் செய்த தவறே அவளுக்கு ஆபத்தை விளைவிக்கிறது.

'மண் பாரம்' என்ற கதையில் உழவர்களின் நிலையையும், அக்குடும்பத்துப் பெண்களின் வாழ்க்கையையும் படம்பிடித்துக் காட்டுகிறார் ஆசிரியர் இமையம். வயலில் நடவு நடுவதற்காக, கிருஷ்ணன், அஞ்சலை தம்பதியினர் விடியற்காலையிலேயே சென்று விடுகின்றனர். வெயிலில் உழவு ஓட்டும் போது பல வேலைகளைச் செய்கிறாள் அஞ்சலை. நடவுக்கு வந்த ஆண்கள், பெண்களுக்கு வயிறார உணவு இடுகிறாள். மனைவி சொல் கேட்டு தாலியை வித்து கடலை போடுவதாக பெருமிதப்படுகிறான் கிருஷ்ணன். ஆனால் மாலையில் நடவு முடிவதற்கு முன்பே மழை பெய்ய ஆரம்பித்து விடுகிறது. ஒரு மூட்டை பயிறு வீணாக போய்விடுமே என வருந்தும்போது, இவதான் எஞ்சொல்ல கேக்காம பயிர வாங்கிப்புட்டா, கையில இருந்த பயிரோட விட்டிருந்தாலும் மனசு ஆறிப்போவும். அதுதான் பண்ணப் பாத்தா இப்பிடித்தான் ஆவும். வெதப் பயிர வித்திருந்தாக் கூட ஐநாறு ஆயிரம்னு வித்துக் காசாக்கி ராசாவாட்டம் சோத்துக்கு வாங்கி

காலாட்டிக்கிட்டு தின்னுக்கிட்டிருக்கலாம். எல்லாம் மண்ணோட போயிடும் போல இருக்கு. பேசாம இருடி பொம்பள, மய இப்ப நின்னுடும் ஆம்பள சொல்றபடி பொட்டச்சி செஞ்சிப்புட்டுப் போவ வேண்டியதுதான். எதுக்கு தனி விலா கோலணும் என தன் மனைவியைக் கிருஷ்ணன் சாடுகிறான். மனைவியின் ஆலோசனைகள் சரியாக அமையும் தருவாயில் ஏற்றுக்கொள்ளும் குடும்பத்தினர் அக்காரியம் கைகூடாத போது பெண் என்பவள் அடங்கித்தான் இருக்க வேண்டுமெ தவிர, ஆட்சி செய்யக் கூடாது என்று மாற்றுக்கருத்துக் கொண்டு அடக்கி ஆள்கின்றனர்.

'மச்சம்' என்ற ஜப்பானியக் கதையில் மனைவியின் கழுத்தில் ஒரு பெரிய மச்சம் இருக்கிறது. அதை அவள் எப்பொழுதும் நெருடிக்கொண்டே இருப்பதைப் பார்த்து அவளுடைய கணவனுக்கும் அவளுக்கும் கருத்து முரண்பாடு ஏற்படுகிறது. அதை தொடாதே! அதைத்தொடும்போது உன் முகம் நன்றாக இல்லை என்று அவளுடைய கணவன் அன்பாகவும், அதட்டியும் கூறுகிறான். அப்பெண்ணால் அதைத் தொடாமல் இருக்க முடியவில்லை. மீண்டும்மீண்டும் அதே செயலைச் செய்கிறாள். இதன்காரணமாக இருவரும் பிரிகின்றனர். தனிமையில் வருந்தும் அப்பெண் தன் தவறை உணர்ந்து, இனி அந்த மச்சத்தைத் தொட்டு உங்களை வருத்தப்பட வைக்க மாட்டேன் என்று கூறிக் கணவனுக்குக் கடிதம் எழுதுகிறாள். கணவனுக்குப் பிடிக்காத ஒரு செயலை நிறுத்த முனையும் ஒரு பெண்ணின் மனவியல்ரீதியான பிரச்சினையே கதையாகிறது. முடிவில் தன் தவறுக்கு மன்னிப்பு கேட்டு மனமொத்த தம்பதியாக வாழ்வதாக கதை அமைந்துள்ளது. இதில் தவறைச் சுட்டிக்காட்டும்போது ஏற்கத் தயங்கும் பெண்ணாகவும் பிறகு கணவன் தன் நன்மைக்கே கூறுகிறான் என்று உணர்ந்ததும் மன்னிப்பு கேட்கும் நல்ல மனைவியாகவும் திகழ்கிறாள்.

'மற்ற மனைவி' என்ற பிரெஞ்ச் கதையில் மார்க் தன் முன்னாள் மனைவியிடம் இருந்து பிரிந்து பின் ஆலிஸ் என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொள்கிறான். இரண்டாவது மனைவி ஆலிஸிற்கு மார்க் தன் முதல் மனைவியைக் காட்டும்போது அப்பெண்ணிற்கு ஏன் இவனை பிடிக்காமல் போனது? என்ற கேள்வி மனதுக்குள் எழுகிறது. முதல் மனைவியோ அவனைப் பிரிந்து சென்றதற்காக எந்த வருத்தமும் இன்றி தன் வாழ்வை சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறாள். இக்கதையில் முதல் மனைவி பெண்விடுதலை விரும்பும் புரட்சிப் பெண்ணாகவும், இரண்டாம் மனைவி ஆலிஸ் முதல் மனைவி எதற்குப் பிரிந்தாள்? அவள் எப்படி இத்தனை ஆடம்பரமாக வாழ்கிறாள்? என்ற கேள்விகளை மனதில் போட்டுக் குழப்பிக்கொள்ளும் சராசரியான மனைவியாகவும் உள்ளதை அறியமுடிகிறது.

'ஒரு மனைவியின் சாகசம்' என்ற மொழிபெயர்ப்புக் கதையில் ஒரு பெண் தன் கணவன் ஊரில் இல்லாத நேரம் தன்னுடைய நண்பர்களோடு விருந்து, ஆட்டம், பாட்டம் என மகிழ்ச்சியாக பொழுதைக் கழிக்கிறாள். விருந்து முடிந்து கிளம்ப நள்ளிரவு ஆகிவிடுகிறது. கையில் சாவி இல்லாததால் வீட்டிற்குச் செல்ல முடியவில்லை. தன் நண்பனுடன் காரில் பயணம் செய்து விடியற்காலையில் வீட்டிற்கு வருகிறாள். அப்போது கதவு திறக்காததால் அருகிலுள்ள கடையில் தேநீர் அருந்துகிறாள். இதில் தன் நண்பர்கள் மற்றும் வழியில் காண்பவர்களிடம் எவ்விதபயமோ, தயக்கமோ இன்றி பேசுகின்ற அவள், மனதளவில் தன் கணவன் ஊரில் இல்லாத நேரத்தில் தான் இரவு

வீடு செல்லாததைப் பிறர் அறிந்தால் என்னவாகும்? என்று கவலைப்படும் சராசரிப் பெண்ணாக உள்ளாள்.

'ஆகாயமும் பூனையும்' என்ற கதையில் தன் கணவன் இருபது வருடத்திற்கு முன்பு காதலித்த பெண்ணைத் தான் இறக்கும் தருவாயில் காண வேண்டும் என்று ஆசைப்பட்டபோது மறுப்பு ஏதும் கூறமுடியாமல் வாய் மூடி மௌனம் சாதிக்கிறாள். திருமணமான மகனும், மகளும் இருக்கும்போது தன் கணவனுக்கு இப்படியொரு ஆசையா? என உள்ளுக்குள் கோபம் கொண்டாலும், ஆச்சாரம், மடி என்று பேசிக்கொண்டாலும் இறக்கபோகும் தன் கணவனின் ஆசையை ஏற்கும் மனைவியைக் காணமுடிகிறது.

'சந்திப்பு' என்ற கதையில் தன் மனைவி லாராவை மார்க்கோ மிகவும் விரும்புகிறான். மனமொத்தத் தம்பதிகளாக வாழ்ந்தனர். இருவரும் ஒருவரைஒருவர் விட்டுக்கொடுத்துக் கொள்ளாமல் வாழ்க்கை நடத்தும் சிறந்த கணவன், மனைவியாக திகழ்கின்றனர்.

மொழிபெயர்ப்புக் கதைகளில் அமையும் கணவன் – மனைவி உறவு நல்லுறவாகவே அமைகிறது. கணவன் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் மனைவியாகவே பெண்கள் அமைந்துள்ளதைக் காணமுடிகிறது.

**2.11.3 மருமகள் நிலையும், பெண்ணின் பணிப்பகிர்வும்**

காதல் திருமணமாக இருந்தாலும், ஏற்பாட்டுத் திருமணமாக இருந்தாலும் பெண் கணவனின் ஆணையை – தேவைகளை – எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதுடன், கணவனது குடும்பத்தாருடனும் ஒத்துப்போக வேண்டும். குடும்பத்திலுள்ள அனைவரின் தேவைகளையும் நிறைவேற்றுதல் வேண்டும். அவர்களுடைய சொல்லிற்கு எதிர்ப் பேச்சு பேசாதவளாக இருக்க வேண்டும், என எதிர்பார்க்கப்படுவதை அம்பையின் கதைகளில் காணலாம். 'வீட்டின் மூலையில் ஒரு சமையலறை' என்ற கதையில் மருமகள் என்பவள் சமையலறையில் எந்நேரமும் பணி செய்யும் இயந்திரம் போன்றவள். ஜீஜி என்ற மாமியார் ஒருமுறை தனது வீட்டிற்கு வரும் மூன்றாவது மருமகள் எப்படி இருக்க வேண்டும் என்பதை, படித்தவள், வெளுப்பானவள், பேசாதவள் என்று, சரியாகச் சொன்னாய் என்ற பப்பாஜி. அப்படி ஒரு பெண் இருப்பாள் என்று மீனாட்சி நம்ப மறுத்தாள். சருமநோய் நிபுணரிடம் பப்பாஜி அறிமுகப்படுத்தினார். இவள் கிஷனின் மனைவி. ஓயாமல் ஊர் சுற்றுகிறாள். சதா கையில் புத்தகம், வாயாடி இவள் கையைப் பாருங்கள் [7] என்று தன் உறவினரிடம் கூறுவதிலிருந்து அறியலாம். மருமகள் என்பவள் எப்படி இருக்க வேண்டும் என ஆணாதிக்க சமுதாயம் எண்ணுகின்றதோ அதை ஆண் கூறாமல் பெண்ணின் மூலமாகவே வெளிப்படுத்தும் சாதூர்யத்தைக் காண முடிகிறது. மேலும் மருமகளை இம்சைப்படுத்தும் மாமியார்கள், பெண்ணே பெண்ணுக்கு எதிரியாகும் நிலையை உணர்த்துகின்றனர். குடும்பம் என்ற தளத்திற்குள் உரிமை பெறாத பெண்ணும், கல்வியில் உரிமை பெற்ற பெண்ணும், பொது நிறுவனங்களில் பணி ஏற்பதைக் காட்டிலும் குடும்பத்தில் பணி ஏற்றல் என்பது தந்தைவழி சமூகக் குடும்ப ஒழுங்கமைவாகக் கருதப்படுகிறது. குடும்பம், பெண்ணின் கல்வித் தகுதியைக்கொண்டு குடும்ப உறுப்பினர்களை நெறிப்படுத்த பயன்படுத்துகிறது;

எப்போதும் பிறரின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுபவளாக கருதுகிறது. பெண் கல்விபெறுவதில் ஆதரவு காட்டுவதான செயற்கை தன்மையை ஏற்படுத்தி அவளை இயல்பாக வாழவிடாது குடும்பம் அழுத்துகிறது.

ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காலச்சுவடு இதழ்களின் தமிழ்ச் சிறுகதைகள் மற்றும் மொழிபெயர்ப்பு கதைகளில் இடம்பெறும் பெண் கதாபாத்திரங்கள் சமுதாயத்திலும், குடும்பத்திலும் அடக்குமுறைக்கு உள்ளாகின்றனர். பெண்மைக் குணங்களுடன் பெண் எழுச்சிக்கு அமைதியாகப் போராடுகின்றனர். மேலும் ஒடுக்குமுறையில் சிக்கிய பெண்கள் விடுதலை பெறுவதற்கான அறைகூவல் விடுவதாகவும் இக்கதைகள் அமைந்துள்ளன.

மேலைநாட்டுப் பெண்கள் ஆண்களின் மேலுள்ள வெறுப்பினால் குடும்பம் என்ற அமைப்பை உடைத்தெறிந்தனர். அதன் விளைவாக ஒவ்வொரு மனிதனும் தனிமைப்படுத்தப்பட்டு, ஆதரவும், மனஅமைதியும் இன்றிப் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகின்றான். இத்தகைய தீய விளைவுகளை உணர்ந்து தற்பொழுது மேலைநாட்டினரும் குடும்ப வாழ்வைச் சீர்செய்ய முற்படுகின்றனர். இத்தவறுகளை இந்தியர்கள் செய்யாமல் பெண்களின் நிலையைத் திட்டமிட்டு தாம் முன்னேறுவதுடன் நாட்டையும் முன்னேற்ற வேண்டும், இந்தியாவில் குடும்பமே ஆதாரமானது. இந்தியப் பெண்களுக்கு அவர்கள் குடும்பத்து ஆண்களின் ஆதரவும், உதவியும் நேர்முகமாகவும், மறைமுகமாகவும் கிடைத்து விடுகின்றன. ஆரம்ப காலங்களில் இந்தியாவில் ஆண்களே தங்கள் குடும்பத்துப் பெண்கள் பொதுவாழ்வில் ஈடுபட உறுதுணையாக நின்றனர். இன்றும் பொது வாழ்வில் ஈடுபட்டு வெற்றி பெற்றிருக்கும் பெண்களின் முன்னேற்றத்திற்கு அவர்களது குடும்பத்து ஆண்களே உறுதுணையாக இருக்கின்றனர் என்பது ஆராய்ச்சி முடிவுகள் காட்டும் உண்மையாகும். ஆயினும், பெண்களைத் தாழ்வுபடுத்தும் ஆண் மேலாதிக்க மதிப்பீடுகளும், அதன் விளைவாக ஆண்கள், பெண்களைப் பற்றிகொள்ளும் மனப்பாங்கும் அதிக அளவில் மாற்றம் பெற வேண்டியது அவசியம். பெண்களைத் தாழ்வு படுத்தும் சமூக மதிப்பீடுகளை மாற்றும் முயற்சியில் ஆண், பெண் இருபாலரும் ஒத்துழைக்க வேண்டும்.

**அடிக்குறிப்பு**

1. பிரேமா, இரா., பெண்ணியம், ப. 46
2. அரங்க. மல்லிகா, தமிழ் இலக்கியமும், பெண்ணியமும். ப. 36
3. மனோஜ்குமார், பால், காலச்சுவடு இதழ் 25, ப . 47
4. அரங்க. மல்லிகா, தமிழ் இலக்கியமும், பெண்ணியமும். ப 42
5. மேலது, ப . 43
6. இமையம், மண்பாரம், காலச்சுவடு இதழ் 39, ப . 23
7. இமையம், மண்பாரம், காலச்சுவடு இதழ் 39, ப . 38